# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011,* மே மாதம் 27 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *11.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

## 2011 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. (கூட்.) 21/2010

**மகேஸ்வரி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை.

"மகேஸ்வரி மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்கென இதற்கு முன்னர் கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, "மகேஸ்வரி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்" என எடுத்துக்காட்டப்படலாம்.

மகேஸ்வரி மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மகேஸ்வரி மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மகேஸ்வரி மன்றம்" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு வழக்குத்தொடுக்கலாமென்பதோடு அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கையிலுள்ள எல்லாச் சமுதாயங்களுக்குமிடையே சமாதானம், நன்மதிப்பு, புரிந்துணர்வு மற்றும் கூட்டுறவு என்பவற்றை மேம்படுத்துதல் ;

(ஆ) இலங்கையில் மனித உரிமைகள், உயர்வாந்தன்மை மற்றும் பல்பதவியாண்மை மேம்படுத்துதலும் பாதுகாத்தலும் ;

(இ) கிராம இடப்பரப்புகளில் கிடைக்கக்கூடிய இயற்கையான வளங்களைப் பயன்படுத்திக்கொள்வதன்மூலம் அவ்விடப்பரப்புகளில் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியை மேம்படுத்தல் ;

(ஈ) ஆகக்கூடிய நன்மைகளைப் பெறுவதற்கு தொழினுட்ப வியலை அறிமுகப்படுத்துவதன்மூலம் விவசாய மற்றும் மீன்பிடித்துறைகளை மேம்படுத்துதல் ;

(உ) விஞ்ஞான கற்கை நெறிகளை முன்னேற்றுவதற்காக இலங்கை முழுவதும் தகவல் தொழினுட்பவியல் நிலையங்களைத் தாபித்தல் ;

(ஊ) உயர்கற்கை நிறுவகங்களைப் பலப்படுத்துதலும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தலும் புலமைப்பரிசில்களை வழங்குதலும் ;

(எ) வேறுபட்ட இனக்குழுக்களை வளப்படுத்துவதற்காக சமூக மற்றும் கலாசார செயற்பாடுகளை மேம்படுத்தல்;

(ஏ) பெண்கள், சிறுவர்கள், ஊனமுற்ற மற்றும் உரிமை குறைந்த மக்களுக்கு உரிமை அளித்தல் ;

(ஐ) மக்களிடையே விளையாட்டுகள், இலக்கிய ஈடுபாடுள்ள மற்றும் இறையருள் சார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்துதலும் ஊக்குவித்தலும் ;

(ஒ) உள்ளூர் மற்றும் வெளிநாடு ஆகிய இரண்டிலும் ஒரேமாதிரியான ஒழுங்கமைப்புகளுடன் ஒருங்கிணை

தல் அத்துடன் அதனுடைய குறிக்கோள்களை முன்னேற்றுவதற்காக கூட்டங்கள், கருத்தரங்குகள், மாநாடுகள் என்பவற்றை ஒழுங்கமைத்தல் ;

(ஓ) குறிக்கோள்களை முன்னேற்றுவதற்காக மானியங்கள் மற்றும் நிதியுதவிகளின் வேறு வடிவத்தினைப் பெற்றுக் கொள்ளுதலும் ஏற்பாடு செய்தலும் ;

(ஔ) இளைஞர்களிடையே தொழிலை உருவாக்குவதிலிருந்து அரசாங்க முகவர்களிற்கான ஒவ்வொரு உதவியையும் ஏற்பாடு செய்தல் ;

(க) காணியற்ற குடும்பங்களுக்கு காணிகள் மற்றும் வீடுகளை வழங்குதலும் பாடசாலைகளுக்கு கட்டிடங்கள் மற்றும் வேறு வசதிகளை ஏற்பாடு செய்தலும்;

(ங) கிராமங்களில் வீதிகள் மற்றும் மின்சாரம் என்பன போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் ;

(ச) தேவையான மாணவர்களுக்கு ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளைக் கற்பிப்பதற்கான வகுப்புக்களை நடாத்துதல் ;

(ஞ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்கு கண்காட்சிகள், விரிவுரைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், வேலைக்களங்கள் மற்றும் பட்டிமன்றங்கள் என்பவற்றை மேம்படுத்துதலும், ஒழுங்குபடுத்துதலும் ஒழுங்கமைத்தலும் ;

(ட) இக்குறிக்கோள்களை அடைவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான நூல்கள், சஞ்சிகைகள், பருவவெளியீடுகள், புதினப்பத்திரிகை போன்றவற்றை அச்சிடுதலும் வெளியிடுதலும் அத்துடன் விநியோகித்தலும் ;

(ண) கூட்டுத்தாபனத்திற்குத் தேவையான நிதியைத் திரட்டும் முகமாக வருமானம் உழைக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும். இத்தத்துவங்களுள் அசையும் அல்லது அசையா ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும் நடாத்தவும் அத்துடன் முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், மானியக் கொடைகளையும், நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதிகளை முதலீடு செய்யவும், கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டிடத்தை அல்லது கட்டமைப்புக்களை நிறுவுவதற்கும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தினதும் 6ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினதும் வேறு ஏற்பாடுகளுக்கு அமையவும் தவிசாளர், முகாமைப் பணிப்பாளர், நிதிப் பணிப்பாளர், நிருவாகப்பணிப்பாளர், செயற்பாட்டுப்பணிப்பாளர், திட்டமிடற்பணிப்பாளர் மற்றும் சட்டப்பணிப்பாளர் மற்றும் ஒரு செயலாளர், பொருளாளர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள அத்தகைய விதிகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்பட்ட மேலும் ஒன்பது உறுப்பினர்களையும் கொண்ட பணிப்பாளர் சபையொன்றினால் நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) மன்றத்தின் தாபக உறுப்பினராகிய டக்ளஸ் தேவானந்தா பணிப்பாளர் சபையின் முதலாவது தவிசாளர் ஆதல் வேண்டும். தவிசாளர் ஆனவர் கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிருவாக சபையானது, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் பணிப்பாளர்கள் சபையின் உறுப்பினர் களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) காலத்துக்குக்காலம் அந்நோக்கத்திற்கென கூட்டப்பட்ட உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமா யிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதனது குறிக்கோள்களை எய்துவதற்கும் இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குவதற்கு விதப்புரை செய்தல் பணிப்பாளர் சபைக்கு சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்படும்போது அதேபோன்ற கூட்ட மொன்றில் அதேமுறையில் அவை மாற்றப்படலாம், அவற்றிற்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லா தொழிக்கப்படலாம்.

(2) சபையின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டுமென்பதுடன், கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, நன்கொடை, ஒப்படைப்பணம், உதவுதொகை கட்டணங் கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் பணிப்பாளர்கள் சபை தீர்மானிக்கக்கூடிய வாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டிய வையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**8.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.*

**9.** கூட்டுத்தபானத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக அல்லது வேறேதேனும் நோக்கத்திற்காக அத்தகைய உறுப்பினரிடமிருந்து உறுப்பாண்மைக் கட்டணமாக வருமதியான தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவு தொகையைச் செய்வதற்கு ஆளாதல் ஆகாது.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**10.** கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப் படக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலுடையதும் இயலுமாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதல் வேண்டும், அத்துடன் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க முழுத்தத்துவமுடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறு அத்தகைய ஆட்களின் எண்ணிக்கையின் முன்னிலையிலன்றி, எத்தன்மைத்தானதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்கள் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**12.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் அதன் வருமானம், செலவினம், சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் பற்றிய தகுந்த கணக்கு களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய் வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறே தேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவரான ஆள் ஒருவர் என்று பொருளாகும் ; அல்லது

(ii) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின் றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று என்று பொருளாகும்.

கலைப்பின்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்

கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அத்துடன் எந்த வேறு நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் விதிகளால் அதன் வருமானம் அல்லது ஆதனமானது அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிரப்படுவதைத் தடை செய்ததோ அல்லது தடைசெய்கின்றனவோ அந்த வேறேதேனும் சில நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்கு கொடுக்கப் படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப் படும் நேரத்தில் அல்லது கூட்டுத்தாபனம் கலைக்கப்படுவதற்கு உடன்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர் மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்